செய்தி வெளியீடு எண்:867 நாள்:11.10.2021

<u>செய்தி வெளியீடு</u>

**திருநங்கைகள் நல வாரியம் அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமனம்**

தமிழ்நாட்டிலுள்ள திருநங்கைகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் செயல்படுத்தும் பொருட்டு 2008ம் ஆண்டில் அரவாணிகள் நல வாரியம் ஒன்று அரசால் அமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

திருநங்கைகள் நல வாரியத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைவராகவும், துறையின் முதன்மைச் செயலாளர், துணைத் தலைவராகவும், சமூக நல இயக்குநர், உறுப்பினர்–செயலராகவும், பல்வேறு அரசு துறைகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கி அலுவல் சார் உறுப்பினர்களாகவும், திருநங்கைகளை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

இந்நல வாரியத்தின் வாயிலாக சமுதாயத்தில் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்ளும் திருநங்கைகள் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கும் வகையிலும், அனைவரையும் போன்று கண்ணியத்துடன் சமுதாயத்தில் பங்கேற்கும் வகையில் திருநங்கைகளுக்கான அடையாள அட்டை, குடும்ப அட்டை, குடியிருப்புகள், சொந்த தொழில் துவங்குவதற்கான மானியம், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதந்திர ஓய்வூதியம், கோவிட் ஊரடங்கு கால நிவாரண நிதி, அரசுப் பேருந்துகளில் பாதுகாப்பான இலவச பயணம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகிறது.

திருநங்கைகள் நல வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 2020ம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டதால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள 12 திருநங்கைகள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட 13 நபர்களை தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் புதிய அலுவல் சாரா உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

| வ.எண். | பெயர் (திருவாளர்கள்) மற்றும் முகவரி |
|---|---|
| 1. | A. ரியா,<br>எண்.5/84, சீனிவாசன் பாளையம்,<br>கருவவேப்பம்பட்டி (அஞ்சல்),<br>திருசெங்கோடு (தாலுகா),<br>நாமக்கல் மாவட்டம். |
| 2. | T. பியூட்டி,<br>எண்.1/9, கீழ அலங்காரத்திட்டு,<br>தூத்துக்குடி மாவட்டம். |
| 3. | R. அனுஶ்ரீ<br>எண்.55/28, குத்ரத் அலி மாக்கன் தெரு,<br>டாக்டர் நடேசன் ரோடு,<br>திருவல்லிகேனி, சென்னை மாவட்டம். |
| 4. | சத்யஶ்ரீ சர்மிளா,<br>எண்.152 A,<br>அரவாணிகள் குடியிருப்பு தெரு,<br>நடராஜபுரம், புக்கத்துரை,<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| 5. | M.நிலா,<br>எண்.4/179, R. M. வீரப்பன் தெரு,<br>பெரும்பாக்கம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். |
| 6. | M.ராதா,<br>எண்.29/11, T.S.V. கோயில் தெரு,<br>மயிலாப்பூர், சென்னை மாவட்டம். |
| 7. | பிரியா பாபு,<br>எண்.49, முதல் தளம்,<br>மூன்றாவது வீதி, விஸ்வநாதபுரம்,<br>மதுரை மாவட்டம். |

| | |
|---|---|
| 8. | k. அருணா,<br>எண்.160, மேற்கு நமச்சிவாயபுரம்,<br>சூளைமேடு, சென்னை மாவட்டம், |
| 9. | P. மோகனாம்பாள் நாயக்,<br>எண்.189, சுவாமிநாதபுரம், வேங்கூர்,<br>திருவெம்பூர்,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 10. | Dr. S. சுதா<br>எண்.5, இரண்டாவது தளம்,<br>இரயில்வே காலணி, முதல் தெரு,<br>அமைந்தகரை,<br>சென்னை மாவட்டம். |
| 11. | K. அருண் கார்த்திக்<br>எண்.1148, டாக்டர். அம்பேத்கர் நகர்,<br>20வது குறுக்கு வீதி, ஆதம்பாக்கம்,<br>சென்னை மாவட்டம். |
| 12. | செல்வம் முனியான்டி<br>எண்.4/47, மைலான் தெரு,<br>தெக்கப்பட்டி, பொன்னாம்பாள்பட்டி,<br>தேனி மாவட்டம். |
| 13. | வித்யா தினகரன் (பெண்)<br>எண்.3, 4வது E பிளாக்,<br>மாருதி இலுசியம்,<br>பல்லவா கார்டன், 8வது அவினியு,<br>சென்னை மாவட்டம். |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9